REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 29உ வியாழன் (15—12—55) ★ ★ வெளியூர்: மார்கழி 1உ வெள்ளி (16—12—55) [இதழ் 157

பக்ரா-நங்கல் திட்டத்திற்கு பஞ்சாப் சர்க்கார் செலவு!

புதுடில்லி, டிச. 15—

1955 செப்டம்பர் திங்கள் முடிய பஞ்சாப் சர்க்கார் பக்ரா-நங்கல் திட்டத்திற்குச் செலவிட்டுள்ள தொகை ரூ 66 98 கோடி என்று நீர்ப்பாசனத் துறை உதவி மந்திரி ஜெய் சுக்லால் ஹாதி, டி. சி. சர்மா என்பாரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

'அரசியல் அதிகாரம் முழுவதும் வடநாட்டிலேயே குவிந்துள்ளது'

'வடக்கும்-தெற்கும் சமநிலையில் இல்லை'

'உத்திரப்பிரதேசம் உடைக்கப்பட வேண்டும்'

மக்கள் சபையில் டாக்டர் லங்காசுந்தரம் முழக்கம்

புதுடில்லி, டிச. 14—

"அரசியல் அதிகாரம் அத்தனையும் வடநாட்டிலேயே குவிக்கப்பட்டிருக்கிறது; மாநிலக் குழுவினர், வடக்கும்—தெற்கும் 'சமநிலை அதிகாரம்' பெரும் ஏற்பாட்டைச் செய்யத் தவறிவிட்டிருக்கின்றனர்."

"வடக்கே உள்ள உத்தரப் பிரதேசம் துண்டாடப் பட்டாலன்றி, வடக்கும்—தெற்கும் சமமாகும் நிலை ஏற்பட முடியாதெனக் கருதுகிறேன்."

"மாநிலக் குழுவின் சிபாரிசுகள் குறித்து காங்கிரஸ் செயற் குழுவினர் சில முடிவுகள் மேற்கொள்ளும் முன்பாக இதர கட்சியினரையும் கலந்து ஆலோசித்திருந்தால் நலமாயிருந்திருக்கும்."

"இப்போது முதலில், காங்கிரஸ் செயற்குழுவின் முடிவுகளை மக்கள் சபை அப்படியே 'ரப்பர் முத்திரை' போடுவதுபோல ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட மாட்டாது—என்று சர்க்கார் உறுதிமொழி தரவேண்டும்,"

—என்று, டாக்டர் லங்காசுந்தரம் (ஆந்திரா-சுயேச்சை) மக்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மக்கள் சபையில் மாநிலக் குழுவின் சிபாரிசுகள் குறித்த விவாதத்தை உள்நாட்டுத் துறை அமைச்சர் பண்டித கோவிந்தவல்லப பந்த் துவக்கிவைத்தார்.

உடனே சபைத் தலைவர், இது குறித்து சபையில் சுமார் 200 உறுப்பினர்கள் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதாயும், அத்தனை பேரும் பேசுவதற்கு இடமளிப்பது சாத்தியம் இல்லை என்றும், என்றாலும், எல்லாத் தரப்புக் கருத்துக்களும் சபையிலும், சர்க்காரிடமும் தெரிவிக்கப்படவேண்டும் எனறும் தெரிவித்திருக்கிறார்.

இன்று எண்ணற்ற உறுப்பினர்கள் மாநிலக் குழுவின் திட்டம் குறித்துப் பேசினார்.

திட்டங்களை ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துக்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

பம்பாய் உள்ளிட்ட மராட்டியம், பஞ்சாபி மொழி பேசும் மாநிலம், பெல்லாரி உள்ளிட்ட சம்யுக்த கர்நாடகம், தெலிங்கானா உள்ளிட்ட விசால ஆந்திரம், திரு-தமிழகம் உள்ளிட்ட தமிழகம்—என்று பலப்பலக் கோரிக்கைகளும், அவற்றிற்கு எதிர்ப்புக் கருத்துக்களும் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன

'தமிழ் வட்டங்கள் கேரளத்துடன்தான் இருக்கவேண்டும். ஏன் தெரியுமா?'—என்று, விவாதம் இளப்பினாராம், ஏ. எம். தாமஸ் என்ற உறுப்பினர்.

'கூடாது; திரு-தமிழக வட்டங்கள் தமிழ் நாட்டுடன்தான் இணைய வேண்டும்'—என்று, தோழர் நேசமணி எடுத்துரைத்திருக்கிறார்.

அவர், பட்டம் தாணுவின் ஆட்சியின்போது தமிழர்கள்மீது ஏவப்பட்ட அடக்குமுறைக் கொடுமைகளை எல்லாம் சுட்டிக்காட்டி, திரு-தமிழ்ப் பகுதிகள் தமிழ் நாட்

(4-ம் பக்கம் பார்க்க)

அம்பர் சர்க்கா விழுங்கப்போகும் ரூ. 150 கோடி!

இருபது இலட்சம் மக்களுக்கு வேலை தரும் எனும் பெரும் புரளி!

உற்பத்தி மந்திரியின் ஐயப்பாடு!

புதுடில்லி, டிச. 13—

"செலவழிக்கப் பணம் ஒதுக்குவதில் இருக்கும் கஷ்டத்தைக் காட்டிலும் ஒதுக்கின பணத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் இருக்கும் கஷ்டம் அதிகமாகும்."

"'அம்பர் சர்க்கா'வை உபயோகப்படுத்தும்படி எப்படி 20-இலட்சம் மக்களைத் தூண்டுவது? அவைகளுக்குத் தேவைப்படும் பஞ்சையும், தார்க் குழல்களையும் எவ்வாறு பெறுவது? உற்பத்தியாகக்கூடிய 40 கோடி பவுண்டு நூலை எவ்வாறு விநியோகிப்பது? அவைகளைக் கொண்டு நெய்யப்படும் 140-லிருந்து 150 கோடி கெஜம் துணியை எங்கு விற்பது?—ஆகியவைகள் பற்றி ஆராய்ந்து முடிவுகட்ட வேண்டும்."

—இக்கருத்துக்களை, அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் ஸ்தாபனத்தின் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசியபொழுது உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி குறிப்பிட்டார்.

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 'அம்பர் சர்க்கா' முதலிடம் பெற்றிருக்கிறது. பல கட்டங்களில் 'அம்பர் சர்க்கா'வுக்குப் பிடிக்கக்கூடிய உதவித் தொகை மட்டும் ரூ. 82 கோடியிலிருந்து ரூ. 150 கோடி வரையில் ஆகும் எனத் திட்டக் குழு மதிப்பிட்டிருக்கிறது.

ஸ்தாபனத்தின் தலைவர் கோரினதற்கு இணங்க, 'அம்பர் சர்க்கா'வை மக்களுக்கு அறிமுகமாக்குவதற்காக, முதல் ஆண்டிற்குத் தேவைப்படும் உதவித் தொகையை உடனடியாக ஒதுக்க வேண்டும் என்று உற்பத்தி மந்திரி திட்டக் குழுவைக் கேட்டுக்கொண்டு உள்ளார்.

'அம்பர் சர்க்கா'வினால் உற்பத்திச் செய்யப்படும் நூலின் தரத்தையும், நூல், துணி உற்பத்திச் செலவையும் திட்டவட்டமாக மதிப்பிட்டுக் கூறவேண்டும் என்றும், அகில இந்திய கதர் கிராமக் கைத்

(4-ம் பக்கம் பார்க்க)

வரலாற்றிலேயே மிகப் பெரும் அன்பளிப்பு!

நியூயார்க், டிச. 15—

அமெரிக்காவில் தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் 4,115 பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள் ஆகியவைகளுக்காகப் போர்டு தர்ம நிறுவனம் 50 கோடி டாலர் (சுமார் ரூ.238 கோடி) அன்பளிப்பு வழங்குவதென முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில். ஒரே தடவையில் வேறெவரும் இவ்வளவு பெரிய தொகை அன்பளிப்பு வழங்கியதில்லை எனக் கூறப்படுகிறது. வரலாற்றிலேயே இது தான் மிகப் பெரிய அன்பளிப்பாம்.

1936-ல், இந்த போர்டு நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து, இது வரை அளித்துள்ள ஒரே முறை அன்பளிப்புகளைவிட இப்போது அளித்திருக்கும் தொகை, 15 கோடி டாலர் (ரூ. 71 4 கோடி) அதிகமாகும் என்றும் கூறப்படுகிறது.

'ரேடியோ எங்களுக்கு வேண்டவே வேண்டாம்!'

'அதற்கு உணவளிக்க எங்களுக்கு வக்கில்லை'

மத்தியப் பிரதேச பூர்வ குடிகளின் மடைமை

ரெய்பூர், டிச. 13—

"ரேடியோ எங்களுக்கு வேண்டவே வேண்டாம்; எங்களுக்குத் தேவையான உணவுப் பொருளே எங்களிடம் அரிதாக இருக்கும்பொழுது, நாங்கள் எவ்வாறு அதற்கு உணவளித்து வருவது? அது எங்களால் முடியவே முடியாது,"

—இவ்வாறு மத்தியப் பிரதேசத்திலுள்ள பாஸ்டர் மாவட்டத்தில் வசிக்கும் பூர்வகுடிகள் கூறியுள்ளனர்.

மத்தியப் பிரதேச சமூக நல அமைச்சர், அப்பகுதியில் வாழும் மக்களுக்காக, ஒரு ரேடியோ அமைப்பை ஏற்படுத்த முயற்சித்தார். அதிலிருந்து இன்பமான பாட்டுகளை பூர்வகுடிகள் ஆச்சரியமாக அனுபவித்தபோதிலும், ரேடியோவிற்கு வேளாவேளைக்கு உணவளித்துவர தங்களுக்கு சக்தி இல்லை எனக் கூறி, 'அது எங்களுக்கு வேண்டாம்' எனப் பிடிவாதமாகக் கூறிவிட்டனர்.

மக்களுக்குத் தேவைப்படுவது போல ரேடியோவிற்கு உணவுத் தேவை கிடையாது என எடுத்துக் கூறி, ரேடியோவை ஏற்றுக்கொள்ளும்படி பூர்வகுடிகளை அவர் இணங்கச் செய்தார்.

மாநிலங்கள் சபையில் ஒரு கேள்விக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில், நிலக்கடலைப் பருப்பை விட, நிலக்கடலை எண்ணெயின் ஏற்றுமதியை அதிகரிப்பதே சர்க்காரின் கொள்கையாகும் என வர்த்தக, தொழில் துறை மந்திரி டி. டி கிருஷ்ணமாச்சாரி சொன்னார்.

காமராசர் 'சர்வாதிகாரத்திற்கு'ப் புதிய குத்தகை!

கரையாளர் கும்பல் தலைகாட்டவில்லை!

திருப்பூர், டிச 14—

வரப்போகும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்குக் காங்கிரஸ் கட்சி அபேட்சகர்களைப் பொறுக்குவதற்காக இங்கு கூடிய தமிழ் நாடு காங்கிரசின் பொதுக் குழுக் கூட்டத்தில் 5 பேர் கொண்ட குழு ஒன்று ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது

அந்தக் குழுவில் பி. கக்கன் காமராசர், டி டி. கிருஷ்ணமாச்சாரி சி. சுப்பிரமணியம் எம். பக்தவத்சலம் ஆகிய 5 பேர்களும் இடம் பெறுகின்றனர்.

பொதுக் குழுவில் உள்ள மொத்தம் 292 பேர்களில் 267 பேர்கள் கலந்துகொண்டிருக்கின்றனர்.

ஐம்பதுக்கும் மேலான உறுப்பினர்கள் கொண்டுவந்த தீர்மானம் ஒன்று—காங்கிரசிற்குப் பெரும் சேவை செய்துள்ள காமராசரை, 'சர்வாதிகாரி' என்று தூற்றி எல் எஸ். கரையாளர் அறிக்கை விடுத்ததைக் கண்டிக்கிற தீர்மானம்—பெருத்த ஆரவாரத்திற்கிடையே, ஒருமனதாக நிறைவேறியிருக்கிறதாம்.

மாநிலத்தில், காங்கிரஸ் கட்சி தேர்தல் அதிகாரியாக தோழர் என். இராமகிருஷ்ண ஐயர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாராம்.

காமராசரை எதிர்ப்பதாகக்கூறி வந்த கரையாளர், மற்றும் சிலரும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

கலந்து கொண்டோரில் தோழர் டி. ஜி கிருஷ்ணமூர்த்தி, பி இராமச்சந்திரன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாம்.

ரஷ்ய தலைவர்கள் தாயகம் புறப்பட்டனர்

விமான நிலையத்தில் வழியனுப்பு

புதுடில்லி, டிச. 14—

சோவியத் ரஷ்யத் தலைவர்களான பிரதமர் மார்ஷல் புல்கானின், கம்யூனிஸ்டுக் கட்சி செயலாளர் நிகிதா குருஷ்சேவ் ஆகியோர் தமது குழுவினருடன் இன்று பாலம் விமான நிலையத்திலிருந்து—இந்தியச் சுற்றுப் பயண முடிவில்—தாயகம் புறப்பட்டனர்.

தனது இதயத்தின் ஒரு பகுதியை இந்தியாவிலேயே விட்டுச்செல்வதாக, கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ் கூறியிருக்கிறார்.

அந்தத் தலைவர்களை வழியனுப்ப ஆயிரக்கணக்கான மக்களும், பிரதமர் நேரு, குடியரசு துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன், அமைச்சர்கள், மக்கள் சபை உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் முதலானோரும் வந்திருந்தனர்.

விமான நிலையத்தில் புல்கானின், குருஷ்சேவ் இருவரும்—இந்திய விருந்து நினைவு மாறாக் காட்சிகளையும், எண்ணங்களையும், அன்பையும், வாழ்த்துக்களையும் எடுத்துச் செல்வதாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

"நமக்கு மிகவும் நெருங்கிய அன்பர்கள் நம்மைவிட்டுப் பிரிவது இதயத்தையே பிரிப்பதாக இருக்கிறது," என்று, பிரதமர் நேரு உருக்கமாகப் பேசினாராம்.

'இந்திய—சோவியத் நட்புறவு நாளுக்கு நாள் வளரும்' என்றும், 'அந்த நட்புச் சிதறாது' என்றும் ரஷ்யத் தலைவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 15—12—'55 வியாழன்

துரோகச் செயல்!

இந்தியத் துணைக்கண்டத்தின் 'தேசிய' மொழிகளென அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பதினான்கு மொழிகளுள் இந்தி மொழியும் ஒன்றாகும். ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மற்ற மொழிகளுக்கு இல்லாத தனிச் சிறப்பு இந்தி மொழிக்கு இருந்து வருகிறது.

இலக்கியத் துறையிலும், இலக்கண முறையிலும் மற்ற மொழிகளைவிட இந்தி மொழி முன்னேற்றம் பெற்றிருக்கிறது என்பதற்காகவல்ல, மற்ற மொழிகளுக்குத் தரப்படாத மதிப்பு இந்திக்கு மட்டும் தரப்பட்டிருப்பதற்கான காரணம். இந்தி மொழியை இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ஒரு காரணத்தினாலேயே, மற்ற மொழிகளுக்கு இல்லாத ஒரு பெரும் சிறப்பை இந்தி பெற்று இருக்கிறது.

இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதினால், சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் மற்ற பதின்மூன்று மொழிகள் வழங்கும் பிரதேசங்களிலும் ஆதிக்கம் செலுத்த இந்தி மொழிக்கு உரிமை ஏற்படுகிறது. இந்தியைப் போன்றே, இதர பதின்மூன்று மொழிகளும் 'தேசிய' மொழிகள் என்ற பெயரில் அழைக்கப்பட்டபோதிலும், ஆதிக்கம் செலுத்துவதில் இந்தி மொழிக்குள்ள நிலப்பரப்பு, மற்ற மொழிகளுக்கு அறவே கிடையாது. அந்தந்த மொழி வழங்கப்பெறும் நிலப்பரப்பளவோடு மற்ற மொழிகள் இருந்துவிடும். ஆனால், இந்தி மட்டும் குமரிமுனை முதல் காஷ்மீர்வரை, இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக அரசோச்சும்.

இந்தி, தமிழ், ஆந்திரம், வங்காளம் என்ற மொழிகள் அனைத்தும் 'தேசிய' மொழிகள் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும்கூட, அவை ஒவ்வொரு மொழியினையும் செயல்படுத்தும் ஆட்சிக்குரிய அதிகார அந்தஸ்தின் காரணமாக, இந்திக்கு முன்னால் அம்மொழிகள் மண்டியிட வேண்டியதாகிறது. இலக்கிய வளம் மிகுந்ததானாலும், இலக்கண அமைவு கூடியதானாலும், இனிமையும் இன்பமும் பயப்பதானாலும், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தேத் தோன்றியதானாலும், இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியான இந்தி மொழிக்கு முன்னால், தமிழ் தலைவணங்கித் தவிக்க வேண்டி இருக்கிறது! ஆந்திரம் அழுது அரற்ற வேண்டி இருக்கிறது! வங்கம் விம்மி விம்மி வேதனைப்பட வேண்டி இருக்கிறது!

மாகாண அரசாங்கங்களின் மொழிகளாக மட்டுமே மற்ற மொழிகள் இருந்து வருவதினால், அவை ஒவ்வொன்றும் வழங்கப்பெறும் பகுதிகளுக்குள்ளாகவே, அவைகளை முடக்கிவிட, இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியான இந்தியால் முடிகிறது. அதே காலத்தில், இந்தியப் பேரரசின் அதிகாரம் செல்லும் இடம் அனைத்திலும் இந்தியால் ஆட்டம் போட முடிகிறது.

பதினான்கு மொழிகளும் 'தேசிய' மொழிகளென்று தான் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. இருந்தாலும், செயலளவில் இந்தி மொழி, மற்ற மொழிகளைவிட பேரதிகாரம் பெற்று விளங்குகிறது.

'தேசிய' மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி, தமிழ் மக்களின் ஆட்சி மொழியாகவும், நாட்டு மொழியாகவும் இருந்த போதிலும், தமிழ்நாட்டின் உயர் நீதிமன்றத்தில் அம்மொழி மட்டுமே வழங்கும் என்று சொல்வதற்கில்லை. இந்தியப் பேரரசின் ஆட்சிமொழியான இந்தி மொழியும், தமிழ்நாட்டின் உயர் நீதிமன்றத்தில் அதிகாரத்துடன் தமிழுடன் சேர்ந்து உலாவும்.

உத்திரப் பிரதேசத்தின் தாய் மொழியாகவும் ஆட்சி மொழியாகவும், இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாகவும் இந்தி மொழியே இருக்கின்ற காரணத்தால், மொழிவழியில் உத்திரப் பிரதேசத்தின் ஆதிக்கம், அதுவும் ஒரு மாகாண ஆட்சியாக இருந்தபோதிலும்கூட, மற்ற மாகாணங்களின் மீது படர்வதற்கும் ஏதுவாகும். அரசியல் துறையில் இப்பொழுது உள்ள நிலையே அதுதான் என்றாலும், அந்த நிலை எதிர்காலத்தில் மேலும் வலிவு பெறும். அதற்கு இந்திமொழி அரியதோர் சாதனமாக அமைந்துவிடும்.

ஆங்கில ஏகாதிபத்தியம் அரசியல் அதிகாரத்தினால் மட்டுமேயல்லாது, மொழி பலத்தினாலும் இந்தியத் துணைக்கண்டத்தில் செயல்பட்டிருக்கிறது. அதேபோன்றுதான், இந்தி மொழி பலத்தினாலும், அரசியலில் அதிகாரம் செலுத்த உத்திர பிரதேசத்திற்கும் ஒரு புதிய வாய்ப்பு ஏற்படும்.

பல்கலைக் கழகப் போதனா மொழியாகத் தமிழ் மொழியை ஏற்றுக் கொள்வதினாலும், ஆட்சி மொழியாக அமைத்துக் கொள்வதினாலும், தமிழ் மொழிக்கு வளம் அல்லது பாதுகாப்புத் தேடிவிட முடியும் என்று சில பலர் சொல்லி வருகிறார்கள். அவர்களில் முதன்மையானவர் நமது கல்வி அமைச்சர் ஆவார்.

எதிர்காலத்தில் இந்தி மொழி ஏகாதிபத்தியப் பேராபத்திலிருந்து அழிந்துபடாமல் தமிழ் மொழியைக் கட்டிக் காக்க, தமிழை ஆட்சி மொழியாக ஆக்கிவிடுவதொன்றே போதுமானது என அமைச்சர் எண்ணிக் கிடக்கிறார். அதே நேரத்தில், அகில இந்திய ஆட்சி மொழியென இந்தி மொழிக்கு வரவேற்பு அளிக்கவும் அமைச்சர் துடிதுடிக்கிறார்.

தமிழ்நாட்டின் உயர் நீதிமன்றத்தில் அகில இந்திய ஆட்சி மொழி என்ற போர்வையில் இந்தி மொழி நுழையும் வேளை, அந்நுழைவைத் தடுக்க அமைச்சரால் ஒருக்காலும் முடியாது—அதற்குத் தேவைப்படும் அதிகாரம் அமைச்சரிடம் ஒப்படைக்கப்படவுமில்லை. இந்தியப் பேரரசிடம் அதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது.

ஆங்கில ஏகாதிபத்திய காலத்தில் ஆங்கில மொழி ஆட்சி மொழியாக, நமது வாழ்க்கைத் துறைகளில் கால் வைத்தது. அதுவரை நமது வாழ்க்கையில் ஊடுருவிக்கிடந்தத் தமிழ் மொழி மெள்ளத் தேய்ந்து, தொட்டில் மொழி நிலையைப் பெற்றுவிட்டது.

அதே வரலாறுதான், இந்தி மொழி ஏகாதிபத்தியத்திலும் நடைபெற இருக்கிறது. எனவே, ஆங்கில ஏகாதிபத்தியத்தில் தமிழுக்கு ஏற்பட்ட தாழ்நிலைதான், இந்தி ஏகாதிபத்தியத்திலும் ஏற்பட முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்தி மொழி ஏகாதிபத்தியப் படையெடுப்பிலிருந்துத் தமிழ் மொழியைக் காக்க வேறு வழியே கிடையாதா— என்ற வினா எழுகிறது. வழி இல்லாமல் இல்லை.

நிச்சயமாக இருக்கத்தான் இருக்கிறது; ஆனால், அவ்வழியோ, அமைச்சர் போன்றவர்களுக்கு அறவே பிடிக்காத வெறுப்பளிக்கக்கூடிய ஒன்றாகும்.

ஆங்கில ஏகாதிபத்தியமும் ஆங்கில மொழியும் இரண்டறக் கலந்த ஒன்றாகவே இந்தியத் துணைக்கண்டத்தில்செயல்பட்டு வந்திருக்கிறது. ஆங்கில மொழியின்றி, ஆங்கில ஏகாதிபத்தியம் கிடையாது; ஆங்கில ஏகாதிபத்தியம் இல்லாமல் ஆங்கில மொழி இல்லை என்ற ஒரு நிலைமையும் இருந்து வந்திருக்கிறது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை அகற்றிய பிறகுதான், ஆங்கில மொழிக்கிருந்த ஆதிக்கம் அல்லது பிடிப்பை அகற்ற முடியும் என்ற நம்பிக்கை ஏற்படலாயிற்று. ஆங்கில மொழியை அகற்றிவிட்டு, அதனுடைய அந்தஸ்தை இந்தி மொழிக்குத் தரவேண்டும் என்ற நினைப்பும் ஏற்பட்டது. அந்த நினைப்பைச் செயலாற்றுவதும் சாத்தியமாயிற்று.

ஆங்கில ஏகாதிபத்தியமும்— ஆங்கில மொழியும் இணைபிரிக்க முடியாத ஒன்றாக எவ்வாறு இயங்கி வந்ததோ, அதேபோன்று, இன்று இந்தியப் பேரரசும்—இந்தி மொழியும் இணைபிரிக்க முடியாத ஒன்றாக இருந்து வருகிறது. இந்தி அகற்றப்பட வேண்டுமானால் இந்தியப் பேரரசின் ஆதிக்கமும் முதற்கண் அகற்றப்பட்டாக வேண்டும்; அந்த அகற்றலில்தான் நாம் கோரும் 'திராவிட நாடு' மறைந்து இருக்கிறது.

இந்தியப் பேரரசின் பிடியிலிருந்து விலக முயலாமல், அதன் பிடிப்பில் இருந்துகொண்டே இந்தி மொழியின் ஆதிக்கத்தைத் தவிர்க்கச் செய்வது அல்லது கட்டுப்படுத்துவது என்பது இயலாத காரியமாகும். அதுவுமன்றி, தமிழ் மொழிக்குப் புதிய ஏற்றம் தேடக் கிளப்புவதும் பொருந்தாது; வெற்றிகரமாக நிறைவேற்றவும் முடியாது.

எனவே, அமைச்சரின் தமிழ் காப்பு அல்லது வளர்ப்பு வெறும் கண்துடைப்புப் பணியாகும். தமிழுக்கு ஏற்றம் தேடுவதாக நடித்து, இந்தி மொழிக்கு இருக்கும் எதிர்ப்பின் வேகத்தைத் தணியவைக்கும் தந்திரச் செயலாகும். இதைக்காட்டிலும் துரோகச் செயல் தரணியில் வேறு எதுவும் இருக்க முடியாது.

இத்துரோகச் செயலை, நமது கல்வி அமைச்சர் அறியாமலும் செய்வதாக இருக்கக்கூடும். அவர் அறியவில்லைஎன்பதற்காக அவர் செயலால் விளையும் கேடு குறைந்துவிடும் அல்லது நிகழாமலே நின்றுவிடும் எனக் கொள்வதற்கில்லை.

'வாக்கெடுப்பிற்குக் கட்டுப்பட வடநாட்டவர் தயாரா?'

'தேவிகுளம், பீர்மேடு தமிழகத்திற்கே வேண்டும்'

சகல கட்சிப் பொதுக்கூட்டத்தில் என். வி. நடராசன் அறைகூவல்

"பீர்மேடு, தேவிகுளம், நெய்யாற்றங்கரை, சித்தூர் பகுதி ஆகிய நான்கு பகுதிகளையும் தமிழ் மக்களின் விருப்பப்படி தமிழகத்துடன் சேர்த்துவிட இந்தியப் பேரரசினர் தயாராக இருக்கிறார்களா? இந்தச் சிக்கலை மக்களின் வாக்கெடுப்பிற்கு விட்டு, அதன்படி நடக்க பண்டிதர் தயாராக இருக்கிறாரா?—என்று திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களாகிய நாங்கள் மத்திய சர்க்காருக்கு அறைகூவல் விடுகிறோம்,"

—என்று, 13—12—55 மாலை 6 மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற 'திரு-கொச்சி—மலபார் தமிழ்ப் பகுதிகள் இணைப்பும், மாநில சீரமைப்புக் கமிஷன் அறிவிப்பும்' என்ற பொருள் பற்றி நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில், தி.மு.கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

பல்வேறு கட்சியினரும் கூட்டத்தில் பங்கு கொண்டனர்.

கூட்டத்திற்கு தோழர் எ. கஜபதி (நாயகர்) எம். எல். சி. தலைமை தாங்கினார்.

தோழர்கள் எஸ். எச். பிளச்சர், உமாபதி, எஸ். சி. சி. அந்தோணி, டாக்டர் மு. வரதராசனார், என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

தலைவர் முன்னுரைக்குப் பின், சிறுவர்கள், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற பின்னணிக்கேற்றவாறு கோலாட்டம் ஆடினர்

தோழர் என். வி. நடராசன் அவர்கள் மேலும் தொடர்ந்துப் பேசியதாவது:—

"'நான் மக்கள் கிளர்ச்சிகளை மதிக்கமாட்டேன்; ஆந்திரம் பிரிந்தது பொட்டி சீராமுலுவின் உயிர் தியாகத்தால் அல்ல'—என்று பண்டித நேரு பேசுகிறார். சர்ச்சில் பேசவேண்டிய பேச்சை—டல்லஸ் பேசவேண்டிய பேச்சை—நம் 'ஆசியாவின் ஜோதி' பேசுகிறார்!

"மக்களின் விருப்பத்தை மதிக்காதவர்கள் யாராக இருந்தாலும்—பாபுஜியானாலும், ராஜாஜியானாலும், நேருஜியானாலும்—அது எந்த 'ஜீ'யானாலும் மண்ணோடு மண்ணாக மக்கிப்போக வேண்டியவர்கள்தான்!

"சர்தார் பணிக்கரை இந்த மாநில சீரமைப்புக் குழுவில் சேர்த்தார்களே அதைக் கொஞ்சம் நுணுக்கமாகப் பார்த்தால் டில்லி தேவதைகளின் நேர்மை விளங்கும்

"இப்படி நான் கூறுவது பண்டித நேருவையோ, மற்றவர்களையோ குறறம் கூறவேண்டுமென்பதற்கல்ல; நாம் கூறுவது அவர்களின் போக்கு எந்தவிதத்தில் போகிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்குத்தான்.

"'வடநாட்டில் பிரிந்த பகுதிகள் ஒழுங்காக இருக்கின்றன; தென்னாட்டில்தான் ஒழுங்கின்றி குழப்பமாக இருக்கிறது'—என்று அவர்கள் சொல்லுகிறார்கள் வடநாட்டில்—உத்திரப் பிரதேசத்தில் கைவைக்கவில்லை, இந்த மாநிலக் குழுவினர்; தென்னாட்டில் ஒன்றுக்கொன்று முரணாகக் குழப்பந்தரும் நிலையில் பிரித்திருந்தால், ஏன் இங்கு குழப்பம் உண்டாகாது? இது தமிழர்களுக்கு தெரியாமல் செய்ததல்ல; தெரிந்தே செய்தது! ஆகவே, நேரு சர்க்கார் கொஞ்சம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பணிவன்போடு எல்லாக் கட்சிகளுக்கும் வேண்டுகோள்விடுகிறது—'நாம் ஒன்றுபடவேண்டும்'—என்று. நாம் அனைவரும் ஒன்றுபட்டு, இந்த முடிவை நல்ல முறையில் அமைதியாகத் தீர்த்துக் கொண்டால் நல்லது—போராட்டத்தினால்தான் தீர்க்கவேண்டும் என்பதல்ல; மாறாக, 'இப்பிரச்சினையையொட்டி ஒரு போராட்டம் உருவாகுமானால், நாங்களும் கலந்துக் கொள்ளுகிறோம்' என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உறுதி கூறுகிறேன்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாங்கள் கேட்கும் அரசியல் உரிமைக்கும்—ம. சோ.-க்களின் அரசியல் உரிமைக்கும் வேறுபாடு இருக்கும்; நாங்கள் கேட்கும் அரசியல் உரிமைக்கும்—தமிழரசுக் கட்சியின் அரசியல் உரிமைக்கும் வேறுபாடு இருக்கும்; நாங்கள் கேட்கும் அரசியல் உரிமைக்கும்—கம்யூனிஸ்டுகளின் அரசியல் உரிமைக்கும் வேறுபாடு இருக்கும்; ஆனால் தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைய வேண்டுமென்பதில் யாருக்கும் வேறுபாடு இருக்காது! தமிழைக் காட்டிக்கொடுப்பவர்களுக்கு—தமிழைத் தாய் மொழியாகக் கருதாதவர்களுக்கு—தமிழ் நாட்டிற்குத் துரோகமிழைக்கும் துரோகிகளுக்குத்தான் வேறுபாடு இருக்கும்!

"இனி பத்திரிகை ஆசிரியர்கள், 'சென்னை ராஜ்யம்' 'மதராஸ் மாகாணம்' என்பதைவிட்டு, 'தமிழகம்' 'தமிழ் நாடு' என்றே எழுத வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

அல்லலுறும் மக்களுக்கு 'அபயக் கரம்' தாரீர்!

'ரஷ்ய தலைவர்களின் உரை: விபரீதமானது; வேடிக்கையானது'

பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் வர்ணனை

லண்டன், டிச. 13—

"இந்தியா சென்றுள்ள சோவியத் ரஷ்யத் தலைவர்களின் சில உரைகள் விபரீதமானவையாயிருக்கின்றன,"

என்று, பிரிட்டிஷ் பிரதமர் சர் அந்தோனி ஈடன் மக்கள் சபையில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

"ஆசியாவில் நாம் கொடிய காலனிவாதிகள் என்றும், கம்யூனிசம் அந்தக் காலனிப் பிடியிலிருந்து விடுபட உதவும் விடுதலை வீரன் என்றும் ரஷ்யத் தலைவர்கள் கூறியிருக்கின்றனராம்.

"இந்தக் கூற்று, உலகத்தில் எங்கேனும் உண்மையாயிருக்கிறதா? யுத்தத்திற்குப் பிறகு எப்போதாவது, இது உண்மையானது என்று கூறும் நிலையிருக்கிறதா?

"இப்போது எங்கு சுதந்திரம் இருக்கிறது? ஹாம்பர்க்கிலா? கிழக்கு பெர்லின் நகரிலா? பிரஸ்ஸல்ஸ் நகரிலா? வார்சாவிலா? கிழக்கிலே கொழும்பு நகரிலா? அல்லது மங்கோலியாவிலா?— எங்கே சுதந்திரம் இருக்கிறது?" என்று பிரதமர் ஈடன் சபையில் குறிப்பிட்டபோது, பலத்த ஆரவாரம் எழும்பியிருக்கிறது.

உடனே தொழிற் கட்சி உறுப்பினர் ஒருவர் எழுந்து, 'சைப்ரஸ் நிலை என்ன?' என்று கேட்டிருக்கிறார்.

'சைப்ரசில், விவாதிக்கவும், போராடவுமேனும் சுதந்திரமிருக்கிறது' என்று ஈடன் பதிலளித்திருக்கிறார்.

அந்தோனி ஈடன் மேலும் குறிப்பிட்டிருக்கிறார் :—

"பாண்டுங் மாநாட்டில் கலந்துகொண்ட மத்தியக் கிழக்கு நாட்டுப் பிரதிநிதி ஒருவர்-காலனி ஆதிக்கத்திற்கு நண்பராயில்லாதவர் குறிப்பிட்டார்—'காலனி ஆதிக்கத்தை எதிர்த்து நாம் போராட முடியும்; கிளர்ச்சி செய்ய முடியும்; குரல் எழுப்ப முடியும்; ஆனால், கம்யூனிச ஆதிக்கத்தில் நாம் எதிர்ப்புக் குரல் கூட எழுப்ப முடியாது'—என்று!

"நாம் பர்மிய மக்களின் முதுகில் சவாரி செய்துகொண்டு அவர்களைச் சுரண்டிக் கொழுப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது; எத்தனை வேடிக்கையான பேச்சு இது?

"இந்த நாடுகளில் மேலும் வளமான நிலைகளை உண்டுபண்ணுவதற்காக 1951-ம் ஆண்டிலிருந்து காமன்வெல்த் நாடுகளால், கொழும்புத் திட்டத்தின்கீழ் சுமார் 45 கோடி டாலர்வரை செலவிடப்பட்டிருக்கிறது என்பதை, இந்த வேடிக்கைப் பேச்சுப் பேசியவர் கேட்டறிந்ததே இல்லைபோலும்! அமெரிக்கா இதற்கு மேலும் ஏராளமான அளவில் செலவிட்டிருக்கிறது.

"ரஷ்யத் தலைவர்கள் இன்னும் இந்தியாவின் விருந்தாளிகளாகவே இருக்கின்றனர். இந்தியாவை நெருக்கடி நிலைக்கு ஆளாக்க நான் விரும்பவில்லை. ஆனால், ரஷ்யத் தலைவர்கள் விபரீதமான வாசகங்களை, நாம் சுதந்திரம் வழங்கிய—நாம் மதிக்கிற—சுதந்திரம் பெற்றிருக்கிற—மிக நேசமான நட்புறவு கொண்டிருக்கிற இந்தியாவில் பேசியிருக்கிறார்கள் என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தகுந்தது என்பதை மட்டும் கூறவிரும்புகிறேன்."

மேலும் ஈடன் குறிப்பிட்டார் :—

'மத்தியக் கிழக்கு நாட்டைச் சேர்ந்த மற்றுமோர் பிரதிநிதி, பாண்டுங் மாநாட்டில் குறிப்பிட்டார்—'கம்யூனிசம், ஒரு புதுவகையான காலனி ஆதிக்கக் கொள்கை'—என்று!

"அடிப்படையில் அது உண்மைதான்; ஏனெனில், கம்யூனிசக் கொள்கை, உலக ஆதிக்கத்தை இலட்சியமாகக் கொண்டிருக்கிறது.

"நாம் கம்யூனிசத்தை ஏற்க மாட்டோம்; ரஷ்யர்கள், மக்களாட்சி அரசு முறையை ஏற்கமாட்டார்கள்; பின் எப்படி, இருவரிடையேயும் 'கூடி வாழ்தல்' இருக்க முடியும்?

"நாம் இந்தச் சிக்கலைத் தவிர்க்க தொடர்ந்து முயற்சித்து வருகிறோம்; இன்னும் முயற்சிப்போம்.

"ஆனால், 'கூடி வாழ்தல்' என்பது வெற்றி பெற வேண்டுமானால், அது இருவழிப் பாதையாக இருக்கவேண்டும் இருதரப்பினரும் மற்றவரை மதிக்கவும், புரிந்துகொள்ளவும், சகித்துக் கொள்ளவும் வேண்டும்.

"கூடி விவாதிப்பதற்கு நான் எப்போதும் தயாராகவே இருக்கிறேன்; ஆனால், நம் நண்பர்கள் நம்மைத் தூற்றுவது, நமது விசுவாசத்தை உறுதி செய்கிறது—நமது முடிவை உறுதிபடுத்துகிறது; உலகம், இதனை இப்போது உணர்ந்திருக்கும் என்று நம்புகிறேன்."

வருமானவரி செலுத்தாமல் தப்ப முயன்றவர்கள்

புதுடில்லி, டிச. 13—

1953—54-ம் ஆண்டில் வருமான வரி செலுத்தாமல் தப்ப முயன்ற 7 159 பேர்களிடமிருந்து அபராதங்களாகவோ, சமரச முடிவு தொகைகளாகவோ மொத்தம் ரூ. 81,25,543 வசூலிக்கப்பட்டதாக மாநிலங்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

கைத்தொழில் அபிவிருத்தி

ரூ. 5 கோடி மானியமாக டில்லி ஆட்சி வழங்கியதாம்!

புதுடில்லி, டிச. 13—

கதர்—கிராமக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக, இந்திய சர்க்கார் அகில இந்திய கதர்-கிராம கைத்தொழில்கள் போர்டுக்கு 1955—56-ம் வருடத்தில் ரூ. 5 கோடி மானியங்களாகவும், ரூ. 25 கோடி கடன் தொகைகளாகவும் வழங்கியிருக்கிறார்களாம்!

மானியங்களாக வழங்கப்பட்ட தொகையில் கதர் அபிவிருத்திக்காக ரூ 35 கோடியும், கிராமக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக ரூ 15 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

கடன் தொகையில் கதர் தொழிலுக்கு ரூ 1 கோடியும், கிராமக் கைத்தொழில்களுக்கு ரூ. 15 கோடியும் கிடைத்திருக்கிறதாம்.

மக்கள் சபையில் எழுப்பப்பட்டுள்ள கேள்விகளுக்கு இவ்வாறெல்லாம் விவரம் தரப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கல்வி பயிலும் இந்திய மாணவர்

மொத்தம் 718 மாணவர்கள் உயர்தரக் கல்வி பெறுவதற்காக இந்தியாவிலிருந்து 1954—55-ம் வருடத்தில் அமெரிக்காவுக்குச் சென்றனர் என்றும், அவர்களில் 332 மாணவர்கள் தங்களுடைய சொந்தச் செலவில் சென்றனர் என்றும், ராஜ்யங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கு அனுதாபம்

4—11—55-ல், துறையூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றபோது பேராசிரியர் இருதயராஜ் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், பொங்கல் வாரத்தில் கழக முதலாவது ஆண்டு விழா நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

* • *

பேராசிரியர் இருதயராஜ் அவர்கள் இயற்கை எய்தியமை குறித்து, சென்னை ஸ்டிரான்ஸ் ரோட், தி. வி. க மறுமலர்ச்சி மன்றச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* • *

12—11—55ல் நடைபெற்ற அண்ணாமலை பல்கலைக் கழக தி. மா. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில், பேராசிரியர் ஏ. இருதயராஜ் அவர்கள் இயற்கை எய்தியமை குறித்து, ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

'புரியாத பாரதீயப் பண்பாடு!'

'நவ இந்தியா' தரும் சூடு!

13—12—55 'நவ இந்தியா' என்ற இதழில், 'ஊர் வம்பு' என்ற பிரிவில், 'பாரதீயப் பண்பாடு' என்ற தலைப்பில், 'யூ ஆர்.' என்பவர் எழுதியுள்ள கட்டுரையின் பகுதிகள் கீழே தரப்படுகின்றன :—

நேருஜி, நிவாரண நிதியிலிருந்து, ஒன்றரை இலட்சம் ரூபாயை ஒதுக்கினர்; 'அவசியமானால், மேலும் ஒதுக்கப்படும்,' என்கிறார்.

விமான விபத்தில் இரண்டு பேர் இறந்துவிட்டால்கூட அனுதாபம் தெரிவிக்கும் ஜனாதிபதி, புயல், வெள்ளக் கொடுமைக்கு ஏன் எதுவும் சொல்லவில்லை — என்று கேட்கும் அன்பர்களும் இருக்கிறார்கள்.

ஜனாதிபதி சொல்லாவிட்டாலும், அவர் மூலமாக சவூதி அரேபிய மன்னர் ரூ. 50,000 கொடுத்து, தனது அனுதாபத்தையும் தெரிவித்துச் சென்றுவிட்டார். அந்த அளவுக்கு நாம் திருப்தியடைய வேண்டியதுதான்!

அனுதாப விவகாரம் எப்படியிருந்தபோதிலும் உங்களுக்கும், எனக்கும் புரியாத ஒரு பண்பாடு இருக்கிறது; அதுதான் 'பாரதீயப் பண்பாடு'! 'இமயத்திலிருந்து குமரி முனைவரை இந்தப் பண்பாடு வியாபித்திருந்தபோதிலும், வேங்கடம் தாண்டினால் பண்பாட்டின் போக்கும் மாறிவிடுகிறது' என்கிறார்கள். இந்த மாற்றத்திற்கு ஏற்றபடிதான் அவர்களின் போக்கும் இருக்கிறது.

இந்தியாவிலேயே பம்பாய், கல்கத்தா, ஆமதாபாத் இம்மூன்று நகரங்கள், தொழில் செழித்துப் பணம் கொழிக்கும் ஊற்றுக்கள்.

பஞ்சாபில் வெள்ளம் என்றால் பம்பாயில் கமிட்டி அமைத்து, சில மணி நேரத்தில் இலட்சக்கணக்கில் வசூலித்துவிடுகிறார்கள். வடக்கே வேதனை என்றால் தெற்கிலிருந்து பணமும், பொருளும் செல்கிறது. வேங்கடத்திற்குத் தெற்கே மாறுபட்ட பண்பாட்டின் எதிரொலி இது!

★

இந்தியாவில் உள்ள பாங்கி, இன்ஷ்யூரன்ஸ் தொழிலின் பெரும் பகுதி (ஏன், முழுவதும் என்றே சொல்லலாம்!) வடக்கில் உள்ள புள்ளிகளின் பொறுப்பில் இருக்கிறது. தெற்கிலிருந்து வருமானத்திற்கு மட்டும் குறைச்சல் இல்லை.

இருந்தாலும் தமிழ் நாடு புயல்—வெள்ள நிவாரணத்திற்கு என்ன செய்தார்கள்?

"பம்பாயில் பத்து இலட்சம் வசூலாயிற்று; ஆமதாபாத் ஆலைகளிலிருந்து அவதிப்படும் மக்களின் உதவிக்கு ஜவுளி பேல்கள் தெற்கே வருகின்றன; கல்கத்தாவில் கமிட்டி அமைத்து ஜரூரான நிதி வசூல்; உத்திரப் பிரதேசத்திலிருந்து ஆயிரக்கணக்கான சர்க்கரை மூட்டைகள் உதவி..."—என்ற செய்திகளைப் பார்த்தால், 'பாரதீயப் பண்பாடு' நமக்கும் புரியும். எதிர்பார்த்த இந்த உதவிகளில் எதுவும் கிடைக்கவில்லை! புயலுக்குப் பதிலாக இதற்குத்தான் இப்போது யாராவது அனுதாபம் சொல்ல வேண்டும்.

"'ஜன-கன-மண' கோரசில் நாமெல்லாம் பின்பாட்டுக்காரர்கள் சார்..." என்று என் ஆபீஸ் பையன் வேறு அனுதாபத்துடன் ஆரம்பிக்கிறான்.

'மக்களின் துயரங்களுக்கு ஆண்டவனல்ல காரணம்'

குருஷ்சேவ் தரும் விளக்கம்

புதுடில்லி, டிச. 13—

சோமனுபெட்சமூகாலத்திட்டப் பகுதியில் சுற்றுப் பயணம் செய்தபின் அங்கு குழுமியிருந்த விவசாயப் பெருமக்களிடத்தில் சோவியத் கம்யூனிஸ்டு செயலாளர் நிகிதா குருஷ்சேவ் பேசியதாவது :—

"விவசாயத் துறையில் இயந்திரங்கள் உபயோகிக்கப்பட வேண்டும்; விவசாயிகளுக்கு வேலைகளைத் துரிதமாகச் செய்யக்கூடிய இயந்திரங்கள் தரப்பட்டால்தான், அவர்களுக்குஎழுதப்படிக்க—கல்வி கற்க நேரம் கிடைக்க முடியும்.

"சோவியத் ரஷ்யாவின் விவசாயிகளின் சார்பில் இந்தியாவில் உள்ள குடியானவர்களுக்கும், விவசாயிகளுக்கும் எல்லா வளங்களும் கிடைக்க வேண்டும் என்ற வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்

"உலகெங்கணும், ஒருகாலத்தில் விவசாயிகளின் வாழ்க்கை மிகக் கஷ்டமானதாயிருந்தது. விவசாயப் பெருங்குடிமக்கள் துயரங்களையும், சுரண்டலையுமே அனுபவித்து வந்திருக்கின்றனர்.

"பல்வேறு சரித்திர அரசியல் நிலைகளினால் பெரும்பாலான விவசாயிகள், வாழ்க்கையில் எந்தவித வாய்ப்பும் பெற முடியாதவர்களாயிருந்தனர்; அவர்களுக்குக் கல்வி கற்க வாய்ப்புத் தரப்படவில்லை; அதனால் அவர்கள் அறியாமையில் உழன்றார்கள்.

"விவசாயிகள் இப்படி கல்வியற்று பின்தங்கிய நிலையிலிருப்பதற்குக் கடவுள்தான் காரணம் என்று சிலர் கூற முற்படுவார்கள்; ஆனால், உண்மை அப்படி அல்ல.

"விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் குழந்தைகளும் இதரரைப் போன்றே ஆற்றலும், அறிவும்கொண்டுதான் பிறக்கிறார்கள்; ஆனால் வளருவதற்குப் போதுமான சமவாய்ப்புக் கிடைக்காதவர்களாகவே இருக்கின்றனர். ஒருவன் முன்னேறுவது—வளருவது, அவனைச் சூழ்ந்துள்ள சுற்றுச்சார்பு, உள்ள ஆற்றலை வளர்த்துக்கொள்வதற்கான சம சந்தர்ப்பம் கிடைப்பது — இவற்றைப் பொறுத்ததுதானுதும்."

இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்கும் தென்னை மரங்கள்

விஞ்ஞான முறையில் வளர்க்க முயற்சி

தமிழகத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளக் கோடுமையின் காரணமாகப் பல பகுதிகளில் இலட்சக்கணக்கான தென்னை மரங்கள், நிலைபெயர்ந்து வீழ்ந்துவிட்டன என்ற செய்தி கேட்டு நாம் துடிதுடித்தோமல்லவா? ஆண்டிற்குப் பத்து இலட்சம் தேங்காய் செலவாகிறதென்றும், அதன் கயிற்று வேலைத் தொழிலில் மட்டும் ஐந்தரை இலட்சம் பேர் வேலை செய்கின்றனர் என்றும் கூறப்படும் இந்த நேரத்தில், பலவகையிலும் தென்னை பயன் தரும் விவரம் இங்கு தரப்படுகிறது.

தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையிலுள்ள எர்ணுகுளம், திருவாங்கூர்-கொச்சி பகுதிகளில் தென்னைமரம், பல்வகைப்பட்ட மக்களுக்குப் பல்வகை நலன்கள் வழங்குவதாய் விளங்குகிறது.

எண்ணெய் ஆலைகளிலாவது, சோப்புத் தொழிற்சாலைகளிலாவது, கயிற்று வேலை செய்யும் இடங்களிலாவது வேலை செய்வோருக்கு இந்தத் தென்னையால்தான் பிழைப்பு கிடைக்கிறது. தொழில் அதிபர்கள் அதனைக்கொண்டுபுதிய தொழில்கள் செய்யக் கருதுகிறார்கள்.

பொதுவாக மேற்குக் கடற்கரையில் உள்ள மக்களின் அன்றாட வாழ்க்கைக்குதென்னைமரம் இன்றியமையாததாய் இருக்கிறது. திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலுள்ள மக்களில் 80 சத விகிதத்தினருக்கு, தென்னை மரத்தால் ஏற்பட்டுள்ள பல்வகைத் தொழில்களால் பிழைப்பு நடக்கிறது. அந்த மாநிலத்தை யொட்டியுள்ள மலையாளம் மாவட்டத்தையும் சேர்த்துக் கணக்குப் பார்த்தால், தென்னை மரத்தால் இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்களுள் மூன்றில் இரண்டு பங்கு இந்தப் பிரதேசத்தில் உற்பத்தியாவதாகத் தெரிகிறது. உலக முழுவதுமுள்ள தென்னையால் ஏற்படும் பொருள் உற்பத்தியை நோக்கினால் பிலிப்பைன்சுக்கு இரண்டாவதாக விளங்குவது இந்தியாதான்.

(4-ம் பக்கம் பார்க்க)

'உதவிக் கரம்' நீட்ட உத்தமர்களே வாரீர்!

'விலங்கினம் வீழ்ந்துபடும்போது அழுது புலம்பும் தமிழினம்'

'தமிழர் சுட்டுவீழ்த்தப்பட்டபோது துடிக்காதது ஏன்?'

டாக்டர் மு. வரதராசனார் கேள்வி

"தென் திருவிதாங்கூரில் பட்டம் தாணுப்பிள்ளை ஆட்சியின் போது, 'தமிழ்ப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டும்'—என்று போராடிய தமிழர்மீது கொடிய அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டது; 11 பேர் சுட்டு வீழ்த்தப்பட்டனர். நாயோ, மாடோ அடிபட்டாலும்—உயிரிழந்தாலும் இரக்கப்படும் தமிழர்கள், அன்று, தாயகத்துடன் சேரத் துடித்து, தம்முடைய தாய் மொழியையே பேசும் 11 பிணங்கள் விழ்ந்த பின்னும் உணர்ச்சி பெறுமல் அமைதியாக இருந்த நிலையைக் கண்டு மிகவும் வருந்தினேன்; இம்மாதிரி, வேறு எம்மொழியினரிலாவது ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டால், அவர்கள், சாதி–மத–கட்சி வேறுபாட்டை மறந்து, உடனே ஒன்றுகூடிப் பெருங்கிளர்ச்சி செய்ததை—செய்யவிருப்பதை நாம் பார்த்து வருகிறோம். 'தமிழன் என்றோர் இனமுண்டு' என்று புகழப்படும் இந்த நாட்டில்தான், இப்படிப்பட்ட—தாய் மொழி பேசுவோர் அவதிப்படுவதைக் கண்டும் வாளாயிருக்கும் அவல நிலை இருக்கிறது; இது அடியோடு அகல வேண்டும்."

"மக்கள் சமுதாயத்தில் கடைசியிலுள்ளவனின் குரலைக் கேட்பதுதான் ஜனநாயகம்—என்று மேனுட்டு அறிஞன் ஒருவன் கூறுகிறான்.

"இங்கு, உண்மையிலேயே இந்தியா ஒரு நல்லரசாக—வல்லரசாகத் திகழவேண்டுமானால், மக்களின் உரிமை உணர்ச்சியை மதித்துச் செயலாற்றவேண்டும். அப்படி செய்யத் தவறினால் அந்த வல்லரசால், மக்களை ஒரு சிலகாலம் வரை அடக்கி ஒடுக்க முடியும்; ஆனால் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்ச்சி என்றாவது ஒருநாள் பீறிட்டு வெளிவரவே செய்யும். நல்ல உணர்ச்சியை நாம் தடுக்க முயற்சித்தால், அது தீய வழியில் கிளர்ந்தெழ வழி செய்தவர்களாகிறோம்.

"ஆகவே, ஆளுங் கட்சியினர் பொதுமக்களின் உணர்ச்சியை மதித்து, எதிர்காலத்தில் செய்யவேண்டிய உரிய கடமைகளைக் காலத்தில் செய்யவேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் நாடும், மொழியும் நிலைக்கும்."

—இவ்வாறு, 13—12—55ல், சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:—

"இவ்வுலகத்தில் சாதியையோ, மதத்தையோ அறிவுள்ள மக்கள் விட்டுவிட முடியும்; ஆனால் தாய் மொழியை மட்டும் எவராலும் விட்டுவிட முடியாது.

"வடநாட்டில் மகாராஷ்டிர மண்டலம் அமைக்கக் காங்கிரஸ் ஆட்சியினரே தீவிரமாகப்போராடுகின்றனர். கன்னடத்திலும், கேரளத்திலும் அவரவர் உரிமையைப் பறிபோகாமல் பாதுகாக்க விழிப்புடனிருக்கிறார்கள்; ஆனால், நமது தமிழகத்தில், ஆளுங் கட்சியினர், இதற்கு முன்னரே தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டபோது கண்டனக் குரல் எழுப்பியிருந்தால் எப்பொழுதோ தமிழர் கோரிக்கை வெற்றி பெற்றிருக்கும். அந்தச் சந்தர்ப்பத்தில் வாய்மூடி மௌனிகளாகிக் கட்டுப்பட்டிருந்தனர். இப்பொழுதாவது தமிழர் உரிமைகளைக் காக்க முன்வரவேண்டும்.

"தாய் மொழியில் ஆட்சி நடத்தவேண்டும் என்பதோ, மொழிவழியில் நாடு பிரிக்கப்படவேண்டும் என்பதோ குறுகிய நோக்கமன்று; அது மக்களின் உணர்ச்சியை மதித்து நடக்கும் நல்வழியாகும்.

"இதுவரைத் தமிழர்களால் தலைவராக உயர்த்தப்பட்டு, பெரிய பதவிகளை வகித்து ஓய்வு பெற்றிருப்பவர், இன்று புதியதாக ஒரு குரல் எழுப்புகிறார்; அவருக்கு மாகாண ஆட்சி வேண்டியதில்லையாம்; இந்தியா முழுவதும் மத்திய ஆட்சியின் கீழ் கமிஷனர்களால் ஆளப்பட வேண்டுமாம்; தமிழகத்தில் தமக்கு இப்போது பதவி கிடைக்காததால்தான் இப்பெரியார் இப்படிச் சொல்வதாகக் கருதவேண்டியிருக்கிறது. தமிழகத்திலிருந்து மட்டும் இங்ஙனம் சொல்லாமல், இந்தியா முழுவதிலும் சுற்றி இந்த 'அரிய' கருத்தை அவர் சொல்வாரேயானால், அவருக்குக் கிடைக்கும் 'நல்ல வரவேற்பை' உடனடியாகப் பெறுவார் என்பது திண்ணம்.

"தமிழ் மொழிமீது பற்றும், தமிழக எல்லைகளைப் பறிபோகாமல் காக்கவேண்டும் என்பதில் கவலையுமிருக்குமானால் இப்படியெல்லாம் பேசமாட்டார்கள்; எழுதமாட்டார்கள். எல்லைகளைப் பாதுகாக்க தமிழ் மக்கள் ஒன்று திரளவேண்டிய இச்சமயத்தில், இப்படியெல்லாம் 'அறிவுக் கூர்மை'யோடு பேசுவது அவமானம்; துரோகம் என்றுகூடக் கூறலாம்.

"இது ஜனநாயகக் காலம் என்றும், உலகத்தில் ஜனநாயகம் நிலவ வேண்டும் என்றும், அதிலும் ஆசியாவில் உள்ள எவருக்கும் சிறு ஊறு ஏற்பட்டாலும் அதைச் சகிக்கமாட்டேன் என்றும் தலைவர்கள் கூறுகிறார்கள். அந்தோ! அவர்கள், 'தமிழகமும் ஆசியாவில்தான் இருக்கிறது' என்பதையும், தமிழ் மொழி மிகப் பண்பட்ட மொழி — சேர, சோழ, பாண்டியர்களால் வளர்க்கப்பட்ட மொழி என்பதையும் வரலாற்றில் படித்துங்கூட, அம்மொழி பேசும் மக்கள் தாயகத்துடன் சேரவேண்டும் என்பதை ஜனநாயக முறையில் நடைபெற்ற தேர்தல் மூலம் பலதடவை தெரியப்படுத்தியுங்கூட, உரிமை தர மறுக்கிறார்கள். ஒருபக்கம் ஜனநாயகம் பற்றி பாருக்கெல்லாம் பறை சாற்றுகிறார்கள்; மறுபக்கம் அதைப் பிறருக்கு வழங்க அஞ்சுகிறார்கள்—தடுக்கிறார்கள்."

இலட்சக்கணக்கான......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில், வீட்டுத் தேவைகளுக்காக மட்டும் ஆண்டுக்கு 10 லட்சம் தேங்காய் செலவாகின்றன. கயிற்று வேலைத் தொழிலில் மட்டும் 5½ இலட்சம் பேர் வேலை செய்கின்றனர்.

தென்னை, சாதாரணமாக எழுபது ஆண்டுகள் இருக்கும்; 15 ஆண்டுகளுக்குள் பலன் கொடுக்க ஆரம்பிக்கும்; 60 ஆண்டுகள் ஆகிவிட்டால், அதன் பயன் குன்றும்.

இப்பொழுது, தென்கன்னடம், கிழக்குக் கோதாவரி, தஞ்சாவூர், சென்னை, மைசூர், பம்பாய், ஒரிசா, அசாம், மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் விஞ்ஞான முறையில் தென்னை வளர்க்கப்படுகிறது. மேற்கு வங்காளம் இத்துறையில் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று வகுத்து நல்ல பலன் கண்டு வருகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட பட்டு விற்பனையாகவில்லை

புதுடில்லி, டிச. 13—

சீனாவிலிருந்து சில நாட்களுக்கு முன் இறக்குமதி செய்யப்பட்ட மொத்தம் 1,97,940 பவுண்டு பட்டில் 43,037 பவுண்டு பட்டு விற்பனையாகாமல் தங்கிவிட்டதென்று மாநிலங்கள் சபையில் உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி தெரிவித்தார்.

அவ்வாறு மிகுந்துள்ள பட்டு மத்திய பட்டு போர்டிடம் இருக்கிறதென்றும், பற்றாக்குறை ஏற்படும் சமயத்தில் அது வினியோகிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பட்டி மன்றம் துவக்க விழா

16—12—55 மாலை 5 மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில், சென்னை-3, தட்சிண இரயில்வே தமிழ்க் கலை மன்றச் சார்பில், தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெறும் தோழர் எஸ். ஏ. பி. அண்ணாமலை மேற்படி மன்றத்தைத் துவக்கி வைப்பார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

16-12-55 மாலை 6½ மணிக்கு, சென்னை—முத்தியாலுப்பேட்டை எண் 17, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றத்தில், தோழர் மு. மனோகரன் தலைமையில் நடைபெறும். 'மக்களும்—ஆட்சியும்' எனும் பொருள் பற்றி மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

சோவியத் - இந்தியத் தலைவர்கள் கூட்டறிக்கை

புதுடில்லி, டிச. 14—

சோவியத் ரஷ்யத் தலைவர்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் மூன்று கிழமைகள் சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் தாய்நாடு திரும்பும் முன்பு, இந்தியப் பிரதமருடன் சேர்ந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

பிரதமர் நேரு ரஷ்யா சென்றிருந்தபோது, ரஷ்யப் பிரதமர் புல்கானினுடன் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையைப் போன்றதே இதுவும்.

'பஞ்ச சீலம்' எனப்படும் ஐந்து அம்சக் கொள்கைகளில் தங்களுக்குள்ள நம்பிக்கையை உறுதி செய்தும், உலக சமாதானத்திற்காகத் தங்களின் ஆற்றல்களைப் பயன்படுத்துவது என்றும், சர்வதேச நெருக்கடிகளைத் தணிக்க சமாதான வழிகளில் முற்படவேண்டும் எனக் கோரியும், அணு ஆயுதங்கள் உற்பத்தி—உபயோகம்—பரிசோதனை இவற்றை நிபந்தனையின்றி தடைசெய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டும், ஒருவருக்கொருவர் மதிப்பளித்து 'கூடி வாழ்தல்' சாத்தியமே என்றும் அறிக்கையில் கூறியிருக்கின்றனர்.

சமாதானம், பாதுகாப்பு இவற்றை அடைய—இராணுவக் கூட்டுச் சேர்ப்பதோ, வட்டார இராணுவ அமைப்புக் கோஷ்டிகளை நிறுவுவதோ வழி அல்லவென்றும், பல்வேறு அரசாங்கங்களின் கூட்டு முயற்சியினால்தான் சமாதானமும், பாதுகாப்பும் பெற முடியும் என்றும் கருத்தறிவித்திருக்கின்றனர்.

சீனக் குடியரசு, அமெரிக்கா ஆகிய இரண்டும் உயர்தர நிலையில் பேச்சுக்கள் நடத்தி மேலும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும் என்றும், ஆசியாவில் நிரந்தர சமாதானம் நிலவுவது, ஐ. நா.-வில் சீனாவிற்குரிய நியாயமான இடம் கிடைக்காத வரை சாத்தியமில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

பார்மோசா மீது செஞ்சீனாவிற்குரிய நியாயமான உரிமை நிலைநாட்டப்படவேண்டும் என்றும் கூறியிருக்கின்றனர்.

இடம் கோரியுள்ள 18 நாடுகளும், ஏககாலத்தில் ஐ. நா.-வில் இடம் பெறவேண்டும் என்று ஐ. நா. பொதுச் சபை சிபாரிசு செய்திருப்பதை வரவேற்பதுடன், பாதுகாப்புச் சபை இதனை ஏற்றுக் கொண்டு, அதன்படி சீக்கிரமே செயலாற்றவேண்டும் என்றும் சோவியத்—இந்தியத் தலைவர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தூரக் கிழக்கின் சமாதான நலன்களுக்கு ஒன்றியும், கொரிய மக்களின் தேசிய உரிமைகளுக்கு ஒப்பவும் கொரியச் சிக்கல் தீர்க்கப்படவேண்டும் என்றும் அவர்கள் விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தோ-சீனா பற்றிய ஜினீவா மாநாட்டு ஒப்பந்தங்களை, தொடர்புடைய சர்க்கார் அனைவரும் மதித்து நடந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணமும் அவர்களுடைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிலாய் உருக்குத் தொழிற்சாலைக்காகவும், இதர பல இந்தியத் திட்டங்களுக்காகவும், இந்தியாவும்—ரஷ்யாவும் ஒத்துழைத்து வருவதை இரு தரப்புத் தலைவர்களும் வரவேற்றிருக்கின்றனர்.

சோவியத் ரஷ்யா — இந்தியா இரண்டையும் ஒன்றுக்கொன்று நெருக்கத்திற்கு அழைத்து வந்திருப்பதனால் மட்டுமின்றி, உலக சமாதானத்திற்கு வழி செய்வதிலும் ரஷ்யத் தலைவர்களின் இந்திய வருகை முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும் என்றும், அறிக்கையின் இறுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வட ஆற்காடு மாவட்ட தி.மு. கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

"கடும் புயலால் பாதிக்கப்பட்டு துன்பத்திற்கு ஆளாகியிருக்கும் தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு நம் மாவட்டத்தின் சார்பாக உடை, உணவு, பணம் முதலியவைகள் அனுப்பி உதவ வேண்டியிருப்பதால், கழகத் தோழர்கள் உடனடியாகப் புயலால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உதவும் பொருள்களைச் சேகரிக்க வேண்டுகிறேன்; உடனுக்குடன் எனக்குத் தகவலும் அளிக்க வேண்டுகிறேன். வசூலாகும் பொருள் நம் மாவட்டத்தின் சார்பில், உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்"

என்று, வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசியல் அதிகாரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிற்குச் சேர வேண்டியதின் நியாயத்தை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

விவாதத்தில் கலந்துகொண்ட ஆச்சாரியா கிருபளானி, குறிப்பிட்டதாவது:—

'மாநிலக் குழுத் திட்டம் பற்றி சர்க்கார் கருத்தறிவிக்கும் முன்பாக, பல்வேறு கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டு ஆலோசனை நடத்தியிருக்க வேண்டும். அப்போது உடன்பாடு ஏற்படாது போனால், குழுவினரின் தீர்ப்புக்கு எதிராக நடத்தப்படும் கிளர்ச்சிகளைக் குறித்து சர்க்கார் அறிக்கை தரலாம்; ஆனால், அப்படி ஆலோசனை செய்கிற நல்ல நோக்கம் சர்க்காருக்கு இருக்கவில்லை.

காங்கிரஸ்தான் இந்தியா என்றும், காங்கிரசால் தீர்க்க முடியாத தேசிய சிக்கல்களே கிடையாதெனவும், காங்கிரசும், இப்போதைய சர்க்காரும் கருதுகின்றன. அப்படி எல்லாக் கட்சியினரையும் அழைத்து ஆலோசனை நடத்தியிருந்தால், காங்கிரசிற்கோ, சர்க்காருக்கோ எந்தவித நஷ்டமும் ஏற்பட்டிருக்கப்போவதில்லை."

மேலும் ஏ. கே. கோபாலன், எஸ். எஸ். மூர் முதலானோரும் இந்த வகையிலேயே கருத்தறிவித்திருக்கின்றனர்.

1,334 இந்தியர்தான்!

புதுடில்லியிலுள்ள எல்லா வெளிநாட்டுத் தூதுவராலயங்களிலும் மொத்தத்தில் 1,334 இந்தியர்கள் மட்டுந்தான் பணியாற்றுகின்றனராம்!

அம்பர் சர்க்கா......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

'கிராமக் கைத்தொழில் குழுவின் 'அம்பர் சர்க்கா' திட்டத்தின்மீது, வருகிற மே, ஜூன் மாதங்களில், மக்கள் சபை தனது முடிவைக் கூறும்,' என்றும் மந்திரி அறிவித்தார்.

சோவியத்—இந்திய வர்த்தகம்

விரிவாக்குவது பற்றி கூட்டறிக்கை

புதுடில்லி, டிச. 14—

சோவியத் தலைவர்கள் இந்தியா வந்ததின் பயனாக, இப்போது நடைபெற்று முடிவுற்ற ஒரு ஒப்பந்தப்படி, அடுத்த மூன்றாண்டுகளுக்குள்ளாக சோவியத் ரஷ்யா இந்தியாவிற்கு 10 இலட்சம் டன் உருக்கு தந்து உதவும் என்று தெரியவருகிறது.

எண்ணெய் மற்றும் நிலக்கரி உற்பத்திக்கான இயந்திர சாதனங்களையும், அடுத்து நடைபெறும் பேச்சுவார்த்தைகளின்போது வகுக்கப்படும் நிபந்தனைகளின்படி சோவியத் ரஷ்யா இந்தியாவிற்கு வழங்கும் என்றும் முடிவாகியிருக்கிறதாம்.

சோவியத் ரஷ்யாவிலிருந்து இந்தியா எந்த அளவுக்குச் சாமான்கள் வாங்குகின்றதோ அந்த அளவுக்கு இந்தியாவிலிருந்து ரஷ்யாவும் பொருள்களைக் கொள்முதல் செய்யுமாம்.

இந்தியாவிலிருந்து இப்போது வாங்குவதைவிட பெரும் அளவுக்குக் கச்சாப் பொருள்களையும், மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களையும் ரஷ்யா வாங்கும்.

இந்த முடிவு இன்று வெளியாகியிருக்கிற கூட்டறிக்கையில் காணப்படுகிறது.

இந்த முடிவுகளின்படி, வர்த்தகம் விரிவடைவதால், இருதரப்பாரிடையேயும் கப்பல் போக்குவரத்தும் அதிகரிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஏஜண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழ் விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்புவாய்ந்த ஏஜண்டுகள் தேவை:—

விழுப்புரம்
திருவண்ணாமலை
ஜோலார்பேட்டை
மாயவரம்
அரியலூர்
அரக்கோணம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.